டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அமைப்புசாரா சங்கங்களின் சட்டங்களை, ஒன்றிய அரசு* silent *ஆக இரத்து செய்துவிட்டது. அதனை நாம் அமல்படுத்துவோமா என்ற கேள்வியை எழுப்பி, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(அஉ) தீப்பெட்டித் தொழிலுக்கு எதிரான Plastic lighter விற்பனையைத் தடை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழில் தென்மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக மட்டுமல்லாமல், பல்லாயிரக்கணக்கான ஏழைப் பெண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தைத் தருகின்ற தொழிலாக இருக்கின்றது. தற்சமயம் பிளாஸ்டிக்காலான* lighters *வெளிநாடுகளிலிருந்து முறைகேடாக இங்கே விற்பனைக்கு பெருமளவில் உள்ளதால், தீப்பெட்டி விற்பனை பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, கோவில்பட்டியில் உள்ள ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையை 8-9-2022 அன்று ஆய்வு செய்தார்கள். உடனடியாக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார்கள். 15-11-2022 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற உற்பத்தியாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு அண்ணன் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய அனுமதியுடன் நானும் சென்று மத்திய அரசை வலியுறுத்தியிருக்கிறோம். அந்த* lighter-*ஐ தடை செய்து, தீப்பெட்டித் தொழிலை வாழ வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு பிறந்த நாள் பரிசாக அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

(அஊ) கோயம்புத்தூர் மாவட்டம், தொழிற்சாலைகளால் நதிநீரில் ஏற்படும் மாசு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

2023 ஏப்ரல் 21]

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு மண்டலம் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாகும். காவிரி, காளிங்கராயன், பவானி, நொய்யல், அமராவதி என அத்தனை நதிகளுடைய தண்ணீரைக் குடிப்பவர்கள் புற்றுநோயாலும், தோல் வியாதிகளாலும் அவதிப்படுகிறார்கள். என்னைப் போன்றவர்கள் கொங்கு மண்டலத்தில், உயிரிழப்புக்கு வருத்தம் தெரிவிக்கச் சென்றால், பாதி உயிரிழப்பு புற்றுநோயால் ஏற்படுகிறது என்பது தெரிய வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஸ்டெர்லைட்டால் பாதிப்பு ஏற்படுவதைப் போன்று பல மடங்கு* pollution *அங்கு ஏற்படுகிறது. எனவே, இதில் அரசு சிறப்பான கவனத்தைச் செலுத்த வேண்டும். இதில், ஒரேயொரு குறிப்பை மட்டும் சொல்லிவிடுகிறேன்; கொரோனா காலத்தில் தொழிற்சாலைகளும், ஊரும் அமைதியாக இருந்தபோது, மொத்தத் தண்ணீரும் சுத்தமாக இருந்தது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அஎ) ஜல்லிக்கட்டுக்கான நுழைவுச் சீட்டு, கிராம கமிட்டியின்மூலம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நடைபெறும் ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு ஆன்லைன் மூலமாக வழங்கப்படும்* token-*ஐ இரத்து செய்து, அந்தந்த கிராமக் கமிட்டியின் மூலமாக* token *வழங்க வேண்டும் என்று ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் வலியுறுத்துவதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

(அஉ) தீப்பெட்டித் தொழிலுக்கு எதிரான Plastic lighter விற்பனையைத் தடை செய்தல்–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள், தீப்பெட்டித் தொழில் நலிவடைந்திருக்கிறது. அதனால், தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசின்*

[திரு. தா.மோ. அன்பரசன்] [2023 ஏப்ரல் 21

கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழகத்தில் ஏறத்தாழ 400-க்கும் மேற்பட்ட தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகள்மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 50 மில்லியன் அமெரிக்கன் டாலர் அளவிற்கு விற்பனை நடைபெற்று வருகிறது. மேற்கண்ட தீப்பெட்டித் தொழிற்சாலைகள்மூலம் விருதுநகர் மற்றும் அதன் அருகிலுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பைப் பெற்று வருகிறார்கள். தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்குப் பிரதான அச்சுறுத்தலாக இருப்பது, பெட்ரோலிய எரிபொருள் நிரப்பப்பட்ட plastic lighters ஆகும். சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் lighters ஆல் தீப்பெட்டித் தொழில் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக குறைந்த விலைக்கு இறக்குமதி செய்யப்படும் ஒரு lighter ஆனது 20 தீப்பெட்டிகளில் உள்ள தீக்குச்சிகளுக்கு சமமான திறன் கொண்டது. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: இந்திய தீப்பெட்டி சந்தையில் சுமார் 20 சதவிகிதத்திற்கும் மேலாக lighters ஆல் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக, சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் lighters-ஐ தடை செய்ய வேண்டும் என்று 8-9-2022 அன்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒன்றிய அரசின் மாண்புமிகு வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்கள். மேலும், தீப்பெட்டிக்கான மரக் கட்டைகளை இறக்குமதி செய்வதில் உள்ள இடர்பாடுகளைக் களைந்திட வேண்டி, 14-2-2022 அன்று தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் துறைச் செயலாளர் அவர்களால், ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறையின் செயலாளர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், முடித்துவிடுங்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: தீப்பெட்டிக்காக இறக்குமதி செய்யப்படும் மரக்கட்டைகள் புகையூட்டம்

2023 ஏப்ரல் 21] [திரு. தா.மோ. அன்பரசன்]

செய்யப்பட வேண்டுமென்றபட்சத்தில், 5 மடங்கு கட்டணம் விதிக்கப்பட்டிருந்ததை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் தொடர்ந்த வழக்கில், இடைக்கால தடை விதித்து நீதிமன்றம் ஆணை வழங்கியுள்ளது. மேலும், ஒன்றிய அரசின் தாவரப் பாதுகாப்பு இயக்குநரக அலுவலகத்தின் குறிப்பாணை, 12-7-2022-ன்படி, குஜராத் உயர் நீதிமன்ற தீர்ப்பாணை வழங்கப்பட்ட, 28-6-2022 முதல் 5 மடங்கு கூடுதல் கட்டணம் வசூலிக்க வேண்டாமென அறிவுறுத்தியிருக்கிறது. இதன்மூலம் தமிழ்நாடு உற்பத்தியாளர்களுடைய வாழ்வாதாரத்தை கவனத்தில் கொண்டு, தகுந்த நடவடிக்கைகளை நம்முடைய அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

(அஏ) கன்னியாகுமரி மாவட்டம், பன்றியைக் கொன்றதாக 3 வழக்கறிஞர்கள் கைது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நேற்றைய தினம் 3 வழக்கறிஞர்கள் தங்களுடைய சொந்த* estate-*க்குச் சென்றபோது, அங்கே இருக்கக்கூடிய தெரியாத நபர் ஒருவர் ஒரு பன்றியைக் கொன்றுவிட்டார். ஆனால், பன்றியைக் கொன்றவரை விட்டுவிட்டு, 3 வழக்கறிஞர்களையும் கைது செய்து,* forest *அலுவலகத்தில் ஒரு நாள் முழுவதும் வைத்திருக்கிறார்கள். எனவே, . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசின் கவனத்திற்கு வந்துவிட்டது.* Arrest *செய்துவிட்டார்கள் என்று சொல்லிவிட்டீர்கள்.*

(அஐ) வீட்டு வசதி வாரிய குடியிருப்புதாரர்களுக்கு உரிமைப் பத்திரங்கள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன்* K. *அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் வீட்டு வசதி வாரியத்தால் 24,000 வீட்டுமனைகளும், வீடுகளும் ஒதுக்கப்பட்டன. முழுமையாக*